**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032.
தொலைபேசி எண்: 044–22201337.
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 321/ந/2025, நாள் 12.01.2026

C.ஹரிபாபு, ஆவடி,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்

1)நகராட்சி ஆணையர்,
திருத்தணி நகராட்சி, திருத்தணி.
2)உரிமையாளர், ஸ்ரீ மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ்
& ரெடிமேட்ஸ், திருத்தணி. – எதிர்மனுதாரர்கள்

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி IAF, மிட்டனமல்லி, ஹைஸ்கூல் ஸ்ட்ரீட், எண்.21, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.C.ஹரிபாபு என்பவரின் 28.08.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.08.2025 அன்று பெறப்பட்டு 321/ந/2025 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி IAF, மிட்டனமல்லி, ஹைஸ்கூல் ஸ்ட்ரீட், எண்.21, என்கிற முகவரியில் வசிக்கும் திரு.C.ஹரிபாபு என்பவர் தனது 28.08.2025 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகராட்சி அலுவலகம் அருகே 50 மீட்டர் தொலைவில் உள்ள ஸ்ரீ மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் வணிக வளாகம் பலஅடுக்கு மாடி கட்டிடம் முகவரி No.342/3, M.P.S. Salai (Near Market) திருத்தணி–631 209 விதி மீறல் கட்டிடங்கள் அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக வணிக வளாகம் கட்டிடம் கட்டப்பட்டு பணிகள் முடியும் நிலையில் உள்ளன. திருத்தணி நகராட்சி நகரமைப்பு பிரிவு, நகரமைப்பு அலுவலர் திரு.தயாநிதி & ஆணையர் அவர்கள் கடந்த 8 மாதங்களாக வணிகவளாக கட்டிடம் மீது நடவடிக்கை எடுக்காமல் கையூட்டு வாங்கிகொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை. சட்டம் & அரசு ஆணைகள் தெரிந்தும் நகரமைப்பு அலுவலர் தயாநிதி சட்டத்தை காற்றில் பறக்க விடுகின்றனர். இவர் மீது துறை ரீதியாக ஒழுங்கு நடவடிக்கை

எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். வணிக வளாக கட்டிடத்தை சுற்றிலும் இடைவெளி அரசு சட்டவிதிகளின்படி விடவேண்டும். வணிக வளாக கட்டிடம் இடைவெளி விடாமல் கட்டப்பட்டுள்ளது. இரண்டு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துவதற்கு பார்க்கிங் வசதி இல்லை. வரும் வாகனங்கள் சாலையில்தான் நிற்க வேண்டி உள்ளது. இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

ஸ்ரீ மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் ரெடிமேட் வணிக வளாக கட்டிடம் பொதுமக்கள் கூடும் கட்டிடம் என்பதால் 1973ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு இயக்கத்தால் முறையான அனுமதி பெறவில்லை. (Directorate of Town and Country Planning). பொதுமக்கள் கூடும் கட்டிடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டிடம் (உரிமம்) 1965ன் பிரிவு 2(8)ன்படி section 2(8) of the Tamil Nadu Public Building (Licensing) Act 1965ன் படி உரிமம் பெறவில்லை. வணிக வளாகம் கட்டிடம் அனுமதி இல்லாமல் மற்றும் கட்டிடங்கள் இடைவெளி சுற்றிலும் விடாமல் பார்க்கிங் வசதி நிறுத்துவதற்கு இடம் இல்லாமலும் 1965ன்படி உரிமம் பெறாமலும் ஸ்ரீ மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் ரெடிமேட் கடை பலஅடுக்கு மாடி வணிக வளாகம் கட்டிடம் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடத்தை அகற்றியும் (Remove) நகர் ஊரமைப்புச்சட்டம் 1971ன் பிரிவுகள் 56(1) மற்றும் உடன் படிக்கப்பட்ட பிரிவுகள் 85ன் கீழ் Stop Work Notice/Notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிடுதல் Lock and seal and demolition notice அமலாக்க நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடுமாறு மிக பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

திருத்தணி நகராட்சியில் அனுமதி இல்லாமல் 50க்கும் மேற்பட்ட கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் நகரமைப்பு பிரிவு அதிகாரிகள் மூலம் அனுமதி இல்லாத கட்டிட பதிவேடு மற்றும் விதி மீறல் கட்டிடங்கள் சம்பந்தமாக எத்தனை நோட்டீஸ் வழங்கப்பட்டது விவரம் விசாரணை செய்ய வேண்டும். அதன் மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரம் எத்தனை கட்டிடங்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது விவரம் விசாரணை செய்ய வேண்டும். அனைத்து கோப்புகள் நேரடியாக வரவழைத்து ஆய்வு செய்ய வேண்டும்.

அரசாணை & சுற்றறிக்கை உத்தரவுப்படி திருத்தணி நகராட்சி ஆணையர் & நகரமைப்பு பிரிவு அதிகாரிகள் விதிமீறல் உள்ள வணிகவளாக கட்டிடம் மீது நடவடிக்கை எடுக்காமல் சட்டத்தை காற்றில் பறக்க விட்டு வருகிறார்கள். லஞ்சம் வாங்கிக்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அரசு உத்தரவுகளை மதிப்பதில்லை. அரசாணை & சுற்றறிக்கை உத்தரவுப்படி வணிக வளாகம் நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்கள் என் புகார் மனு மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். சட்டத்திற்கு விரோதமான விதி மீறல்கள் உள்ள வணிக வளாகம் கட்டிடங்கள் மீது Locking and seal நோட்டீஸ் வழங்கி ஒரு மாதத்திற்குள் வணிக வளாகம் கட்டிடம் மீது சீல் வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இவர்கள் மீது துறை ரீதியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். சட்டத்திற்கு விரோதமான விதிமீறல் உள்ள வணிக வளாகம் கட்டிடங்களின் புகைப்படம் இத்துடன் இணைத்துள்ளேன்” என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 19.09.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருத்தணி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. திருத்தணி நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.1632/2025/எப்1, நாள்.09.10.2025ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

புகார்தாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றத்திற்கு கொடுத்துள்ள தனது புகார் மனுவில் திருத்தணி நகராட்சி, ம.பொ.சி.சாலை எண்.342/3–ல் உள்ள ஸ்ரீ மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் மற்றும் ரெடிமேட்ஸ் வணிக வளாகம் கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாகவும், மேற்படி கட்டிடத்தின் மீது தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டு கட்டிடத்தை பூட்டி முத்திரையிட நடவடிக்கை எடுக்க கோரப்பட்டுள்ளது.

புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள கட்டுமானம் இடம் நகரமைப்பு ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி வணிக கட்டிடத்தின் முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு பூச்சு வேலை நடைபெற்று வந்தது. எனவே மேற்படி கட்டிடத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 133, 134 மற்றும் 135(1)ன் கீழ் 28.03.2025ம் தேதிய அறிவிப்பு நகரமைப்பு ஆய்வாளரால் 03.04.2025 அன்று கட்டிடதாரரிடம் நேரடியாக சார்வு செய்யப்பட்டது.

மேலும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56(1)ன் கீழ் மேற்படி கட்டுமானத்தை இவ்வறிவிப்பு கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் பழைய நிலைக்கு கொண்டு வர தெரிவித்து இவ்வலுவலக 26.08.2025ம் நாளிட்ட அறிவிப்பு 17.09.2025 அன்று கட்டிடதாரருக்கு நகரமைப்பு ஆய்வாளரால் நேரில் சார்வு செய்யப்பட்டது. அறிவிப்பை பெற்றுக்கொண்ட கட்டிடதாரர் இதுநாள் வரை பதில் அல்லது கட்டிட அனுமதி பெற்ற விவரங்களை ஏதும் சமர்ப்பிக்கவில்லை. மேலும் ஏற்கனவே அனுப்பிய அறிவிப்பு காலம் 17.10.2025 அன்று முடிவடைகிறது.

எனவே கட்டிடத்தின் மீது அரசாணை எண்.195, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 05.11.2022ன்படி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு கட்டிடத்தை பூட்டி முத்திரையிட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரம் சமர்ப்பிக்கப்படுகிறது" எனத்தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர், எதிர்மனுதாரரான திருத்தணி நகராட்சி ஆணையர் மற்றும் 2–ம் எதிர்மனுதாரரான ஸ்ரீ மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் உரிமையாளர் ஆகியோரை 29.10.2025 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.10.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு.C.ஹரிபாபு 29.10.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

6. எதிர்மனுதாரரான திருத்தணி நகராட்சி ஆணையர் மற்றும் நகரமைப்பு அலுவலர் ஆகியோர் 29.10.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளனர்:–

" புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள் ஸ்ரீ மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் மற்றும் ரெடிமேட்ஸ் இயங்கி வரும் வணிக வளாக கட்டிடம் நகரமைப்பு ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டதில், மேற்படி வணிகவளாக கட்டிடம் முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் கொண்ட கட்டிடமானது கட்டி முடிக்கப்பட்டு, பூச்சு வேலை நடைபெற்று வருவது கண்டறியப்பட்டது. கட்டிடத்திற்கான அனுமதி நகராட்சியால் கொடுக்கப்படாததால் மனுதாரரின் புகார் குறித்து, மேற்படி கட்டிடத்திற்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 133, 134 மற்றும் 135(1)ன் கீழ் அறிவிப்பு முறையே 28.03.2025, 26.08.2025 மற்றும் 17.10.2025 ஆகிய தேதிகளில் கட்டிட உரிமையாளரிடம் நேரடியாக சார்வு செய்யப்பட்டது.

தொடர்ந்து, தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56(1)ன் கீழ் வணிக வளாகத்தின் கட்டிட அனுமதியினை சமர்ப்பிக்க கோரியும், கட்டிடம் குறித்த விவரங்களை தெரிவிக்குமாறு கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டுள்ளது. அதற்கான பதிலோ, ஆவணமோ கட்டிட உரிமையாளர் இன்றுவரை நகராட்சியில் தாக்கல் செய்யப்படவில்லை.

மேற்படி வணிக வளாக கட்டிடம் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது என தெரியவரும்பட்சத்தில், அரசாணை எண்.195, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள் 05.11.2022–ன்படி கட்டிடத்தின் மீது தொடர் நடவடிக்கை எடுத்து, பூட்டி முத்திரையிட தேவையான உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விபரத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் மேற்படி ஸ்ரீ மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனம் அமைந்துள்ள கட்டிடம், 3,300 சதுர அடியினைக்கொண்டுள்ளதால் திருத்தணி நகராட்சியினரால் அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை என்பதையும் பணிவுடன் இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

7. இரண்டாம் எதிர்மனுதாரரான ஸ்ரீ மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் மற்றும் ரெடிமேட்ஸ் உரிமையாளர் திரு.G. ஜெயன் என்பவர் 29.10.2025 அன்றைய நேரடி விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்பித்துள்ளார்:–

"மனுதாரரால் புகாராக தெரிவிக்கப்பட்டுள்ள எங்களது கட்டிடத்தில் தரை, முதல் மற்றும் இரண்டாம் தளம், 2000 சதுர அடி அளவுள்ளதால், 2017ம் ஆண்டு திருத்தணி நகராட்சியிடமிருந்து கட்டிட வரைபட அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது மேற்படி கட்டிடத்தில் கூடுதலாக மூன்றாம் தளம் கட்ட கட்டிடத்தின் மொத்த பரப்பளவு 2500 சதுர அடிக்கு மேல் உள்ளதால் அதற்கு DTCP–ன் அனுமதி பெற வேண்டும் என்று இன்று அறிந்து கொண்டேன். ஏற்கனவே பெறப்பட்ட கட்டிட வரைபட அனுமதிக்கு கூடுதலாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால் திருத்திய கட்டிட வரைபட அனுமதியினை DTCP–யிடமிருந்து உரிய அனுமதி பெறப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களது கட்டிடத்திற்கான அனைத்து வரிகளும் முறையாக கட்டப்பட்டுள்ளதற்கான ஆவணங்களை நகராட்சியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட விவரங்களை இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து சமர்ப்பிக்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

8) மனுதாரர் திரு.C.ஹரிபாபு என்பவர் 29.10.2025 அன்றைய விசாரணையில் ஆஜராகாத காரணத்தினால் அவருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கும் பொருட்டு மனுதாரரின் புகார் மீதான விசாரணை 05.12.2025 அன்று நடைபெறும் என தெரிவித்து, மனுதாரர், எதிர்மனுதாரரான திருத்தணி நகராட்சி ஆணையர் மற்றும் 2–ம் எதிர்மனுதாரரான ஸ்ரீ மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் மற்றும் ரெடிமேட்ஸ் உரிமையாளர் ஆகியோருக்கு, இம்முறைமன்ற 17.11.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

9) இதனிடையில் ஸ்ரீ மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் தனது 24.11.2025 நாளிட்ட பதிவு அஞ்சல் கடிதத்தில் கீழ்க்கண்ட விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

“எங்களது கட்டிடத்தில் தரை, முதல் மற்றும் இரண்டாம் தளம் சுமார் இரண்டாயிரம் சதுர அடிக்கு மேல் அளவுள்ளதால், 2017ம் ஆண்டு திருத்தணி நகராட்சியிடமிருந்து கட்டிட வரைபட அனுமதி பெற்றோம். மேலும் மேற்கண்ட முகவரியில் கடந்த 40 ஆண்டுகளாக ஜவுளி கடையை நடத்தி வருகிறோம். கடையின் முன் பகுதி பழுதடைந்து காணப்பட்டதால் அதை Alteration செய்து கொள்ள கடந்த 2017ம் ஆண்டு திருத்தணி நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் அனைத்தையும் செலுத்தி Alteration செய்துகொள்ள ஏற்பாடு செய்தோம். ஆனால் அப்போது கொரானா காலம் என்பதால் பணி தாமதமானதால் தற்பொழுது கடையின் முன் பக்கம் Front Elevation செய்து கொண்டோம்.

மேற்படி எங்களது நிறுவனத்திற்கு ஆரம்ப காலம் முதல் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, ஆகியவைகளை நாளது தேதி வரை நிலுவையின்றி செலுத்தி வருகிறோம்.

மேலும் நாங்கள் மேற்படி கட்டிடத்திற்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம், 1971, பிரிவு 80Aன்படி தங்களிடம் மேல்முறையீடு செய்கிறோம். நாங்கள் தமிழ்நாடு அரசு மற்றும் நகராட்சி விதிகளுக்கு உட்பட்டு நடக்கின்றோம் என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம். எனவே ஐயா அவர்கள் மேற்படி கட்டிடத்திற்கு அரசு விதிகள் மற்றும் நகராட்சி விதிகளின்படி வரன்முறை செய்து தரும்படி மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்” என தெரிவித்துள்ளார்.

10) 05.12.2025 அன்றைய விசாரணையிலும் மனுதாரர் திரு.C.ஹரிபாபு இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகவில்லை. மனுதாரர் புகார் மனுவினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துவிட்டு, விசாரணைக்கு இருமுறை இம்முறைமன்ற நடுவத்தால் வாய்ப்பளிக்கப்பட்டும் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகாதது ஏற்புடையதன்று.

11) எதிர்மனுதாரர் பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையராக பணியாற்றி வருவதோடு திருத்தணி நகராட்சி ஆணையராக கூடுதல் பொறுப்பு வகிப்பதாலும், தற்போது இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்பேரில் S I R பணி நடைபெற்று வருவதாலும், வடகிழக்கு பருவமழைக்காக பணிகளை கவனிக்க வேண்டியுள்ளதாலும், தனக்கு பதிலாக திருத்தணி நகராட்சி நகரமைப்பு அலுவலர் திரு.க.தயாநிதி என்பவர் 05.12.2025 அன்றைய விசாரணையில் கலந்து கொள்வார் என தனது கடிதம் ந.க.எண்.1632/2025/எப்1, நாள் 04.12.2025ல் தெரிவித்ததை தொடர்ந்து திருத்தணி நகராட்சி நகரமைப்பு அலுவலர் 05.12.2025

விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார்.

"மனுதாரர் புகாராகத்தெரிவித்துள்ள மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் மற்றும் ரெடிமேட்ஸ் கட்டிடம் தொடர்பாக நகராட்சியால் வழங்கப்பட்ட அறிவிப்பிற்கு மேற்படி கட்டிடத்தின் உரிமையாளர் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம், 1971 பிரிவு 80Aன்படி அரசு செயலருக்கு மேல் முறையீடு செய்துள்ளார் என்ற விவரம் இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனவே அரசிடமிருந்து ஆணைகள் பெறப்படும் வரை நகராட்சியினால் மேற்படி கட்டிடத்தின் மீதான நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத்தெரிவித்துள்ளார்.

12) 2–ம் எதிர்மனுதாரரான ஸ்ரீ மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் உரிமையாளர் 05.12.2025 அன்றைய விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார்.

" எங்களது நிறுவன கட்டிடம் தொடர்பாக, திருத்தணி நகராட்சியால் வழங்கப்பட்ட அறிவிப்பிற்கு நாங்கள் தமிழ்நாடு அரசு செயலர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறைக்கு, தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 80A–ன்படி மேல்முறையீடு செய்துள்ளோம். அரசிடமிருந்து எங்களுக்கு இது சம்மந்தமாக பதில் பெறப்படவில்லை.

இது குறித்த விவரம் ஏற்கனவே இம்முறைமன்ற நடுவத்திற்கு பதிவு தபால் மூலம் அனுப்பியுள்ளோம் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்". எனத்தெரிவித்துள்ளார்.

13. மனுதாரரின் புகார் மனு, எதிர்மனுதாரரான திருத்தணி நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி ஆணையர் மற்றும் நகரமைப்பு அலுவலரின் வாக்குமூலம், இரண்டாம் எதிர்மனுதாரர் ஸ்ரீ மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் உரிமையாளர் திரு.G.ஜெயன் என்பவரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் முழுமையாக கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகராட்சி அலுவலகம் அருகே 50 மீட்டர் தொலைவில் உள்ள ஸ்ரீ மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் வணிக வளாகம் பலஅடுக்கு மாடி கட்டிடம் முகவரி No.342/3, M.P.S. Salai (Near Market) திருத்தணி–631 209 விதி மீறல் கட்டிடங்கள் அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக வணிக வளாக கட்டிடம் கட்டப்பட்டு பணிகள் முடியும் நிலையில் உள்ளது என்பதாலும், திருத்தணி நகராட்சி நகரமைப்பு பிரிவு, நகரமைப்பு அலுவலர் திரு.தயாநிதி & ஆணையர் அவர்கள் கடந்த 8 மாதங்களாக வணிகவளாகம் கட்டிடம் மீது நடவடிக்கை எடுக்காமல் கையூட்டு வாங்கிகொண்டு உள்ளனர் என்பதாலும், சட்டம் மற்றும் அரசு ஆணைகள் தெரிந்தும் இரண்டு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துவதற்கு பார்க்கிங் வசதி இல்லாமல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது என்பதாலும், மேற்படி நிறுவனத்திற்கு வரும் வாகனங்கள் சாலையில்தான் நிற்க வேண்டி உள்ளது என்பதாலும், இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது என்பதாலும் அக்கட்டிடத்தை பூட்டி சீல் வைக்க உரிய நடவடிக்கையினை எடுக்குமாறு நகராட்சியினரை

கேட்டுக்கொண்ட பின்னரும் உரிய நடவடிக்கை எடுக்காததால் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார் என்பது அவரது மனு மூலம் தெரியவருகின்றது.

புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள முகவரியில் உள்ள கட்டுமான இடம் நகரமைப்பு ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டது என்பதும், மேற்படி வணிக கட்டிடத்தின் முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு பூச்சு வேலை நடைபெற்று வருவதால் மேற்படி கட்டிடத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 133, 134 மற்றும் 135(1)ன் கீழ் 28.03.2025ம் தேதிய அறிவிப்பு நகரமைப்பு ஆய்வாளரால் 03.04.2025 அன்று கட்டிடதாரரிடம் நேரடியாக சார்வு செய்யப்பட்டுள்ளது என்பதும், மேலும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56(1)ன் கீழ் மேற்படி கட்டுமானத்தை அறிவிப்பு கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் பழைய நிலைக்கு கொண்டு வரத்தெரிவித்து 26.08.2025ம் நாளிட்ட அறிவிப்பு 17.09.2025 அன்று கட்டிடதாரருக்கு நகரமைப்பு ஆய்வாளரால் நேரில் சார்வு செய்யப்பட்டுள்ளது என்பதும், கட்டிடதாரரிடமிருந்து பதில் பெறப்படாததால் கட்டிடத்தின் மீது அரசாணை எண்.195, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 05.11.2022ன்படி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு கட்டிடத்தை பூட்டி முத்திரையிட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் திருத்தணி நகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

மேலும் கட்டிடத்திற்கான அனுமதி நகராட்சியால் கொடுக்கப்படாததால் மனுதாரரின் புகார் குறித்து, மேற்படி கட்டிடத்திற்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 133, 134 மற்றும் 135(1)ன் கீழ் அறிவிப்பு முறையே 28.03.2025, 26.08.2025 மற்றும் 17.10.2025 ஆகிய தேதிகளில் கட்டிட உரிமையாளரிடம் நேரடியாக சார்வு செய்யப்பட்டுள்ளது என்பதும் மனுதாரர் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971 பிரிவு 80A-ன் கீழ் அரசு செயலருக்கு மேல் முறையீடு செய்துள்ளார் என்ற விவரமும் திருத்தணி நகரமைப்பு அலுவலரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இரண்டாம் மனுதாரர் கட்டிடத்தில் தரை, முதல் மற்றும் இரண்டாம் தளம் சுமார் இரண்டாயிரம் சதுர அடிக்கு மேல் அளவுள்ளதால், 2017ம் ஆண்டு திருத்தணி நகராட்சியிடமிருந்து கட்டிட வரைபட அனுமதி பெற்றுள்ளதும், மேலும் கடந்த 40 ஆண்டுகளாக ஜவுளி கடையை நடத்தி வருகிறார்கள் என்பதும், கடையின் முன் பகுதி பழுதடைந்து காணப்பட்டதால் அதை Alteration செய்து கொள்ள கடந்த 2017ம் ஆண்டு திருத்தணி நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் அனைத்தையும் செலுத்தி Alteration செய்துகொள்ள ஏற்பாடு செய்துள்ளனர் என்பதும், ஆனால் அப்போது கொரானா காலம் என்பதால் பணி தாமதமானதால் தற்பொழுது கடையின் முன் பக்கம் Front Elevation செய்து கொண்டுள்ளதும், தங்களது நிறுவனத்திற்கு ஆரம்ப காலம் முதல் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, ஆகியவைகளை நாளது தேதி வரை நிலுவையின்றி செலுத்தி வருவதும் மற்றும் கட்டிடத்திற்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம், 1971, பிரிவு 80A-ன்படி அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளதும் 2–ம் எதிர்மனுதாரரின் கடிதம் மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில் ஸ்ரீ மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் நிறுவன உரிமையாளர் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம், 1971, பிரிவு 80A–ன்படி அரசு செயலர், தமிழ்நாடு வீட்டுவசதித்துறைக்கு மேல் முறையீடு செய்துள்ளதாக தெரிவித்துள்ளதை 05.12.2025 நாளிட்ட திருத்தணி நகரமைப்பு அலுவலரின் வாக்குமூலம் உறுதிபடுத்துவதால் தமிழ்நாடு உள்ளாட்சி

அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் மேற்படி புகார் மனு மீது மேல்நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, ஜனவரி 12 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.C. ஹரிபாபு,
   எண்.21, ஹைஸ்கூல் ஸ்ட்ரீட்,
   மிட்டனமல்லி, ஆவடி IAF, சென்னை – 600 055.
2. நகராட்சி ஆணையர்,
   திருத்தணி நகராட்சி, திருத்தணி.
   திருவள்ளூர் மாவட்டம்.
3. திரு.G. ஜெயன்,
   உரிமையாளர், ஸ்ரீ மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ்,
   எண்.342/3, M.P.S. சாலை,
   திருத்தணி. திருவள்ளூர் மாவட்டம்.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி. நகர், சென்னை – 600 028.
5. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர்
   (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர்,
   சென்னை – 600 028.

நகல்:
மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற
நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்